தமிழ்நாடுஅரசு

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை

வட்டாட்சியர் அலுவலகம், கரூர் வட்டம்

கரூர் மாவட்டம்.

| அறிவிக்கை எண்.02/2025 | நாள். 10.10.2025 |
|---|---|

கரூர் மாவட்ட வருவாய் அலகில் கரூர் வட்டத்தில் காலியாக உள்ள 04 கிராம உதவியாளர் பணியிடங்களை நிரப்பிட தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. கீழே கொடுக்கப்பட்டுள்ள இட ஒதுக்கீடு கல்வித் தகுதி மற்றும் வயது வரம்பிற்குட்பட்ட நபர்கள் மட்டும் விண்ணப்பிக்கவேண்டும்.

(குறிப்பு: இவ்வலுவலக அறிவிக்கை எண்.01/2025 நாள்.25.07.2025-இன் படி ஏற்கனவே விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்கள் தற்போது விண்ணப்பிக்க தேவையில்லை)

| | |
|---|---|
| விண்ணப்பங்கள் பெறப்படும் நாள். | 13.10.2025 முதல் |
| விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள். | 27.10.2025 (மாலை 5.45 மணி வரை) |
| பதவியின் பெயர் | கிராம உதவியாளர் |
| சம்பள விகிதம் | சிறப்பு காலமுறை ஊதியம் ரூ.11,100 -35,100/- |
| வட்டத்தின் பெயர் | கரூர் |
| காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை | 04 |
| நிரப்பப்படவுள்ள கிராமங்களின் பெயர் விவரம் | 1) பாகநத்தம்<br>2) ஆச்சிமங்கலம்<br>3) புத்தாம்பூர்<br>4) உப்பிடமங்கலம் மேற்கு |

இன சுழற்சி விவரம்

| வ.எண் | இன சுழற்சி எண். | இன சுழற்சி விவரம் | முன்னுரிமை/ முன்னுரிமையற்றவர் | பொது/ ஆண்/ பெண் | ஆதரவற்ற விதவை/ முன்னாள் இராணுவத்தினர்/ மாற்றுத்திறனாளி |
|---|---|---|---|---|---|
| 01 | 13 | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரப்பினர் (MBC & DNC) | முன்னுரிமையற்றவர் | பொது | - |
| 02 | 14 | பிற்படுத்தப்பட்டோர் (BC) (முஸ்லிம் தவிர ) (other than BC Muslim) | முன்னுரிமையற்றவர் | பொது | தமிழ்வழியில் கல்வி பயின்றவர் |
| 03 | 15 | பிற்படுத்தப்பட்டோர் முஸ்லிம். (BC Muslim) | முன்னுரிமை உடையவர் | பொது | - |
| 04 | 16 | பட்டியலினத்தவர் (SC) | முன்னுரிமையற்றவர் | பொது | - |

| | |
|---|---|
| கல்வித்தகுதி | 1) தமிழ்நாடு அரசுத் தேர்வுகள் இடைநிலைப்பள்ளி இறுதி வகுப்புச் சான்றிதழ் தேர்வில் (SSLC - Secondary School Leaving Certificate Examination) தமிழை ஒரு பாடமாக கொண்டு தேர்வு எழுதிருக்க வேண்டும் (குறிப்பு : SSLC மதிப்பெண் பட்டியல் கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும்). (குறைந்தபட்ச கல்வித்தகுதி பத்தாம் வகுப்பு தோல்வி).<br>2) தமிழில் பிழையின்றி எழுத, படிக்க தெரிந்திருக்க வேண்டும். |
| இதர தகுதிகள். | 1) விண்ணப்பதாரர் கரூர் வட்டத்தைச் சேர்ந்தவராக இருக்கவேண்டும்.<br>2) தேர்வு செய்யப்படுபவரின் நடத்தை குறித்தும் முந்தைய குற்றப்பின்னணி குறித்தும் நியமன அலுவலர் அறிந்து திருப்தி அடையவேண்டும்.<br>3) அடிப்படைவிதி 10 இன்படி உடற்தகுதி சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.<br>4) தேர்ந்தெடுக்க கூடிய நபரின் கணவரோ, மனைவியோ உயிரோடிருக்கும் போது வேறொரு திருமணம் செய்திருக்கக்கூடாது. |
| வயது வரம்பு | குறைந்தபட்ச வயது - 21 வயது (அனைத்து பிரிவினருக்கும்)<br>(01.07.2025 அன்று 21 வயது பூர்த்தியடைந்திருக்க வேண்டும்).<br>அதிகபட்சவயது - 32* வயது (இதர/பொதுபிரிவினர்)<br>39* வயது - பிற்படுத்தப்பட்டோர் / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்<br>42* வயது அருந்ததியினர் / பழங்குடியினர்/ பட்டியலினத்தவர் / (ஆதரவற்ற விதவை எந்த பிரிவினராக இருந்தாலும்)<br>(* அரசு கூடுதல் அரசு கூடுதல் தலைமைச் செயலர் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை [Ser.8(1)] தலைமைச் செயலகம், சென்னை. அவர்களின் கடிதம் (எம்.எஸ்) எண். 636/[Ser.8(1)]2005 நாள்.18.09.2025-இன் படி நிர்யணம் செய்யப்பட்டது).<br>**மாற்றுத் திறனாளிகளுக்கு**<br>அதிகபட்சவரம்புடன் 10 ஆண்டுகள் கூடுதலாக தளர்வு வழங்கப்படும்.<br>**முன்னாள் இராணுவத்தினருக்கு**<br>50* வயது - பொதுபிரிவினர்<br>55* வயது - பிற்படுத்தப்பட்டோர் / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் / பட்டியலினத்தவர் / பழங்குடியினர். |
| விண்ணப்பிக்கும் முறை | கிராம உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கான விண்ணப்பங்களை கரூர் மாவட்டத்தின் அதிகாரப்பூர்வமான இணையதளமான http://www.karur.nic.in இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும், அதில் தெரிவிக்கப்பட்டுள்ள ஆணவங்களுடன் கரூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் வேலைநாட்களில் காலை 10.00 மணி முதல் 05.45 மணி வரை நேரிலோ அல்லது பதிவு அஞ்சல் மூலமாகவோ விண்ணப்பம் செய்யலாம். காலம் கடந்து வரும் எந்த ஒரு விண்ணபங்களும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டது. |
| குறிப்பு | தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு மிதிவண்டி/ இருசக்கர வாகனம் ஓட்டும் திறன்/ வாசித்தல்/ எழுதுதல்/ திறனறித் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு ஆகியவற்றிக்கு தனித்தனியாக கடிதம் அனுப்பி வைக்கப்படும். |

9/10/25

வட்டாட்சியர்,
கரூர்.

9/10/25